**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள் செவ்வாய்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 36/2023</u>

<u>CNR NO.TNTU09-002007-2023</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>அம்பலூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 5/2023 |
| 2. | எதிரிகள் | ரமேஷ் த/பெ. அப்பாதுரை |
| 3. | குற்றம் | பிரிவுகள் 294(b), 323 IPC r/w 4 of TNPHW act. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 02.01.2023 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 02.01.2023 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 07.01.2023-09.01.2023 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 23.03.2023 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 14.06.2023 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.06.02.2026 குவிமுச.பிரிவு 311-ன் கீழ் 217/2026.<br><br>2.17.11.2023 குவிமுச.பிரிவு 311-ன் கீழ் 7915/2023. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 – 15.09.2023, 25.03.2026<br>அ.சா.2 – 15.09.2023, 09.06.2025<br>அ.சா.3, அ.சா.4– 07.10.2023<br>அ.சா.5 – 25.02.2026<br>அ.சா.6 – 18.06.2026<br>அ.சா.7 – 02.07.2026 |

| | | |
|---|---|---|
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 07.07.2026 |
| 12 | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 14.07.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை. |

**நீதித்துறை படிவம் எண்: 61**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், அம்பலூர் காவல் நிலையம்,

எதிரி : ரமேஷ் த/பெ. அப்பாதுரை

குற்றம் : பிரிவுகள் 294(b), 323 IPC r/w 4 of TNPHW act.

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான பிரிவுகள் 294(b), 323 IPC r/w 4 of TNPHW act குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரி பெயர் | தந்தை/கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரமேஷ் | அப்பாதுரை | இந்து | கூலி | அம்பலூர், வாணியம்பாடி | 50 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 02.01.23 | 06.01.23 | 07.01.23 | 09.01.23 | 14.06.23 | 07.07.26 | 14.07.26 | – |

இவ்வழக்கானது 23.03.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 07.07.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராஜி, B.A., B.L., மற்றும் திரு.கலீல், திரு.ராஜி மற்றும் திரு.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## தீர்ப்புரை

### 1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:

இவ்வழக்கில் அம்பலூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட வாணியம்பாடி நேதாஜி நகர் மாரியம்மன் கோவிலிடம் கடந்த 16.09.2022ம் தேதி இரவு சுமார் 10.20 மணியளவில் சாட்சி 1 ன் மகன் ராஜசேகர் இருந்தபோது மாரியம்மன் கோவில் திருவிழா சம்மந்தமாக வரவு செலவு கணக்கு பார்க்க ராஜசேகர் சென்று எதிரிகளான ஊர் நாட்டாண்மை குப்பம் அவரது மகன்களான ராஜேஷ், ராஜ்குமார், அவரது மகள் ராதா மற்றும் செல்வம் மகன் முனுசாமியிடம் ராஜேஷ் பேசும்போது திருவிழாவிற்கு வீட்டிற்கு ரூ.750/– வீதம் வாங்கினீங்க, ஆனால் எங்க தெருவிற்கு கரகம் கால தாமதமாக எடுத்து வருகிறீர்கள், தேர் எங்க பக்கம் வரவேயில்லை. எனவே, திருவிழாவை இனிமேல் நாங்க தனியா நடத்தி கொள்கிறோம் என கூறியதால் எதிரி ராஜேஷ் கையால் தாக்கியும், அதை தட்டிக் கேட்ட சாட்சி1யை பெண் என்றும் பாராமல் அசிங்கமாக திட்டி கையால் உடல் மீது தாக்கி உடலில் உள்காயம் ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 294(பி), 323 உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி நகர காவல் நிலைய ஆய்வாளர் எதிரிகளின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 147, 294(பி), 323 உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச்

சட்டத்தின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323 உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூற வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேலும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிகளான திரு.ரவிச்சந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் திரு.ஜெயராமன், உதவி ஆய்வாளர் இருவரும் வேறு மாவட்டத்திற்கு பணிமாறுதலில் சென்று விட்டதால் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் திரு. பார்த்திபன் ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிரிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5 (i) அ.சா.1 சரஸ்வதி இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.1 சரஸ்வதி கடந்த 2022ம் வருடத்தில் ஒரு நாள் ஊர் திருவிழா கரக ஊர்வலத்தில் மயக்கமடைந்து கீழே விழுந்ததால் அ.சா.1 வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். 18.09.2022ம் தேதி மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திரு.ரவிசந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் மருத்துவமனை சென்று அ.சா.1 சரஸ்வதியை விசாரித்து அ.சா.ஆ.5 புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார்.

5 (ii) திரு.ரவிசந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.5 புகார் வாக்குமூலம் பெற்று அதற்கேற்ப நிலைய குற்ற எண் 212/2022 இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323 உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதே நாள் 18.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அ.சா.8 சீனு, கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.7 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1 சரஸ்வதி, அ.சா2 பாபு, அ.சா.3 கௌதம், அ.சா.4 மதுமித்ரா, அ.சா.5 நாகலட்சுமி, அ.சா.6 சௌபர்ணியா, அ.சா.8 சீனு மற்றும் கார்த்திக் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(iii) பின் நேதாஜி நகர் ஆலங்காயம் ரோடிடம் எதிரிகள் ஐவரையும் கைது செய்து நிலையம் சேர்ந்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக ஜெயராமன், உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளார். ஜெயராமன் உதவி ஆய்வாளர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காயம்பட்ட அ.சா.1 சரஸ்வதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.பிரவின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சொற்பகாயம் என வழங்கிய அ.சா.ஆ.3 காயச்சான்று பெற்றுள்ளார். தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(பி), 323 உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என கூறினார். மேலும். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்</u>

7. இவ்வழக்கில் கடந்த 16.09.2022ம் தேதி இரவு சுமார் 10.20 மணியளவில் அ.சா.1ன் மகன் ராஜசேகர் இருந்தபோது மாரியம்மன் கோவில் திருவிழா சம்மந்தமாக வரவு செலவு கணக்கு பார்க்க ராஜசேகர் சென்று எதிரிகளான ஊர் நாட்டாண்மை குப்பம் அவரது மகன்களான ராஜேஷ், ராஜ்குமார், அவரது மகள் ராதா மற்றும் செல்வம் மகன் முனுசாமியிடம் ராஜேஷ் பேசும்போது திருவிழாவிற்கு வீட்டிற்கு ரூ.750/- வீதம் வாங்கினீங்க, ஆனால் எங்க தெருவிற்கு கரகம் கால தாமதமாக எடுத்து வருகிறீர்கள், தேர் எங்க பக்கம் வரவேயில்லை. எனவே, திருவிழாவை இனிமேல் நாங்க தனியா நடத்தி கொள்கிறோம் என கூறியதால் எதிரி ராஜேஷ் கையால் தாக்கியும், அதை தட்டிக் கேட்ட சாட்சி1 யை பெண் என்றும் பாராமல் அசிங்கமாக திட்டி கையால் உடல் மீது தாக்கி உடலில் உள்காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் எதிரிகளின் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

8. அ.சா.1 சரஸ்வதி இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.1 சரஸ்வதி தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 2022ம் வருடத்தில் ஒரு நாள் எங்கள் ஊர் திருவிழாவில் கரக ஊர்வலத்தில் நான் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டேன். அதனால் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அப்போது போலிசார் வந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக என்று தெரியாது. " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

9. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 பாபு தனது நீதிமன்ற விசாரணையின்போது, " சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊர் திருவிழாவில் கரகம் வருவது குறித்து எங்கள் ஊர்காரர்களிடம் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அன்று இரவு 10.30 மணிக்கு மேல் போலிசார் வந்தார்கள். எதற்காக என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 கௌதம், அ.சா.4

மதுமித்ரா மற்றும் அ.சா.5 நாகலட்சுமி தங்களது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 2022ம் வருடத்தில் ஒரு நாள் எங்கள் ஊர் திருவிழாவில் கரக ஊர்வலத்தில் அ.சா.1 மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார். அதனால் அவர் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 சௌபர்ணிகா தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 2022ம் வருடத்தில் ஒரு நாள் எங்கள் ஊர் திருவிழாவில் கரக ஊர்வலத்தில் என் அம்மா மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டதாக அ.சா.3 எனக்கு தொலைபேசியில் தகவல் சொன்னார். அதனால் அவர் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவரை நான் சென்று பார்த்தேன். " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

10. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.8 சீனு சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், " வழக்கு பற்றி தெரியாது. இரண்டு வருடத்திற்கு முன்பு பிரச்சனை நடந்தது, தற்போது நியாபகம் இல்லை, அ.சா.1 எனது அத்தை. எதிரிகளும் எனது நெருங்கிய உறவினர்கள். அங்கு நின்றுக் கொண்டிருந்தோம். வழக்கு பற்றி தெரியாது. பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை எப்போது யாரிடம் எங்கு வைத்து போட்டுக்கொடுத்தேன் என்று எனக்கு நினைவில்லை. " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

11. அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.7 பிரவின்குமார் தனது சாட்சியத்தில் " கடந்த 16.09.2022 ம் தேதி இரவு 10.30 மணியில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது சரஸ்வதி என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை விசாரித்தபோது அதே நாள் இரவு 10.20 மணிக்கு ஒரு கும்பல் இரும்பு ராடால் தாக்கியதாக சொன்னார். அவருக்கு வெளிபுற காயங்கள் ஏதும் இல்லை, உள்காயங்கள் என்பதால் விபத்து பதிவேட்டில் அதை குறிப்பிடவில்லை. பெண்கள் பிரிவில் அவருக்கு உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டது. சிகிச்சைக்கு பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கினேன். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " இரத்த அழுத்தம்

உள்ள ஒரு நபர் தலைசுற்றி திடீரென கீழே விழும்போது அவருக்கு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், காயம்பட்ட நபர் எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றும், எத்தனை நபர்கள் தாக்கினார் என்று குறிப்பிட்டு கூறவில்லை, கூட்டமாக தாக்கியதாக மட்டும் சொன்னார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 7, 10 விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 சரஸ்வதி, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 பாபு, அ.சா.3 கௌதம், அ.சா.4 மதுமித்ரா, அ.சா.5 நாகலட்சுமி, அ.சா.6 சௌபர்ணிகா மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.8 சீனு ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசு தரப்பு வழக்கு வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. ஆகையால், அ.சா.1 முதல் அ.சா.6 மற்றும் அ.சா.8 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. அ.சா.9 பார்த்திபன், உதவி ஆய்வாளர், அவரது சாட்சியத்தில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் சாட்சி 1 சரஸ்வதியை விசாரித்து அ.சா.ஆ.5 புகார் வாக்குமூலத்தினைப் பெற்று அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.7 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்து வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக திரு.ஜெயராமன், உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சி 1 சரஸ்வதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.7 திரு.பிரவின் குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சொற்பகாயம் என வழக்கிய அ.சா.ஆ.3 காயச்சான்றினை பெற்று, புலன் விசாரணை

முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

14. அ.சா.1 சரஸ்வதி புகார் மனுவிலும், போலீசார் விசாரணையின்போதும், எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கையால் உடல் முழுவதும் தாக்கியதாக கூறிவிட்டு, அதற்கு முற்றிலும் மாறாக, தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக திருவிழாவில் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டேன் என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றாற்போல், வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிரிகளும் அ.சா.1 சமாதானம் ஆகிவிட்டதாக கொடுத்த 22.05.2025ம் தேதி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் குற்ற பல்வகை மனு எண் 1683/2025ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி, மனுவானது இவ்வழக்கின் சில குற்றங்கள் சட்டப்படியாக சமரசம் தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

15. இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 சரஸ்வதி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக **திருவிழாவில் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டேன் என்றும், போலிசார் என்னிடம் எதற்காக கையொப்பம் பெற்றார்கள் என தெரியாது** எனவும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.ஆ.5 புகார்வாக்குமூலமும் அ.சா.1 சாட்சியமும் சந்தேகத்திற்கு உள்ளாகிறது என இந்நீதிமன்றம் கருதுகிறது. கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 பாபு சம்பவம் பற்றி தெரியாது என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், மற்ற கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 கௌதம், அ.சா.4 மதுமித்ரா, அ.சா.5 நாகலட்சுமி, அ.சா.6 சௌபர்ணிகா அவர்களது சாட்சியத்தில் அ.சா.1 **திருவிழாவில் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டதாக** பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.8 சீனு அவரது சாட்சியத்தில் வழக்கு பற்றி தெரியாது என்றும், பார்வை மகசரிலுள்ள கையொப்பத்தை எப்போது யாரிடம் போட்டுக்கொடுத்தேன் என நினைவில்லை என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 மற்றும் அ.சா.8 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம்

அளிக்காத நிலையில், அ.சா.9ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றம் புரிந்தார்கள் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323 உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

16. **முடிவாக,** இவ்வழக்கின் எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 147, 294(பி), 323 உ/இ பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

16. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எதிரிகள் எழுதி கொடுத்த பிணை பத்திரத்தை மேல்முறையீடு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ. எண் | அரசு தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர்கள் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | செல்வி.சர்மிளா | புகார்சாட்சி |
| 2. | அ.சா.2 | திருமதி.ரமணி | கேள்வியுற்ற சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 3. | அ.சா.3 | திரு.ஆறுமுகம் | கேள்வியுற்ற சாட்சி |
| 4. | அ.சா.4 | செல்வி.நந்தினி | கேள்வியுற்ற சாட்சி |
| 5. | அ.சா.5 | திரு. பாலு | பார்வை மகசர் சாட்சி |
| 6. | அ.சா.6 | திரு.பிரகாஷம் | பார்வை மகசர் சாட்சி |
| 7. | அ.சா.7 | திரு.ராமமூர்தி, காவல் ஆய்வாளர். | விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வ. எண் | ஆவணத்தின் எண் | ஆவணங்களின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 06.01.2023ஆம் தேதியிட்ட புகார்வாக்குமூலம். | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 06.01.2023ஆம் தேதியிட்ட பார்வை மகசர் | அ.சா.5 |
| 3. | அ.சா.ஆ.3 | 06.01.2023ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. | அ.சா.7 |
| 4. | அ.சா.ஆ.4 | 06.01.2023ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| 5. | அ.சா.ஆ.5 | 02.01.2023ஆம் சர்மிளா தேதியிட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. | அ.சா.7 |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்</u>** – இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>** – இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்றுப் பொருட்கள் மற்றும் சான்றாவணம்</u>** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.